அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 21/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.7
13 யூலை, 1988.

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரசாங்கக் கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கும்.

கடமையின்போது பயங்கரவாதச் செயலால் காயமடைந்த/ நிரந்தர ஏலாவாளியாகிய அரசாங்க உத்தியோகத்தர்கள்/ உள்ளூராட்சிப் பணியாளர்கள்/அரசாங்கக் கூட்டுத்தாபனப் பணியாளர்களுக்கு மருத்துவ உதவிப்படியும்/இழப்பீடும், இறப்பு நேர்ந்திருப்பின் அத்தகைய உத்தியோகத்தர்களில் தங்கியிருப்போர்க்கு இழப்பீடும் வழங்கல்.

---

1985.06.19ஆம் தேதியிட்ட 296ஆம் இல. அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இதனால் பதிலீடு செய்யப்படுகிறது.

02. அரசாங்க உத்தியோகத்தர், உள்ளூராட்சிப் பணியாளர், அரசாங்கக் கூட்டுத்தாபனப் பணியாளர்க்கு கடமையின்போது பயங்கரவாதச் செயலால்:-

(அ) காயத்துக்கான மருத்துவ உதவி

(ஆ) நிரந்தர இயலாமைப் பொருட்டு, இழப்பீடும்

(இ) அத்தகைய உத்தியோகத்தர் இறந்துள்ள விடத்து அவரில் தங்கியிருப்போர்க்குக் கொடுபடத்தகு இழப்பீடு கீழே தரப்பட்டுள்ளன.

அ. கடமையிலுள்ளபோது பயங்கரவாத செயலால் காயமடைந்தவராகி/ சேவையில் வைத்துக் கொள்ளப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்/ உள்ளூராட்சிப் பணியாளர்கள்/அரசாங்கக் கூட்டுத்தாபனப் பணியாளர்களுக்கு மருத்துவ உதவிப்படி.

(i) மருத்துவசாலையில் சேர்க்கப்பட்டு, காயங்கள் 'பாரியவை' என வகைப்படுத்தப்பட்டோர் விடயத்தில் உடனடியாகத் தொடக்கக் கொடுப்பனவாக 3000ரூபாவும் அதனையடுத்து மாதாந்த கொடுப்பனவாக 500ரூபாவும் (10,000ரூபா உச்சம் வரை) ஆனால் உத்தியோகத்தர் கடமைக்கு மீண்ட நாளிலிருந்து கொடுப்பனவு இடம்பெறலாகாது.

(ii) காயங்கள் 'இடைநிலைப்பாரியவை' என வகைப்படுத்தப்பட்டவிடத்து, மேலே (i) பந்தியில் குறித்த அதே நிபந்தனையின்படி, 6,000 ரூபாவுக்கு மேற்படாமல்

(iii) காயங்கள் 'பாரியவை' என்றோ 'இடைநிலைப் பாரியவை' என்றோ வகைப்படுத்தப்படாதவிடத்து 3000ரூபா உடனடிக் கொடுப்பனவு

குறிப்பு: உத்தியோகத்தர் மிக அண்மையிலுள்ள அரசாங்க மருத்துவ உத்தியோகத்தரிடமிருந்து காயத்தின் வகுதிப்பற்றி அறிக்கை பெற்று திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**கடமையின்போது பயங்கரவாதச் செயலால் நிரந்தர ஏலாவாளியாக்கப் பட்ட அரசாங்க உத்தியோகத்தர் உள்ளூராட்சிப் பணியாளர், அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனப் பணியாளருக்கு கொடுப்பனவுகள்.**

(1) உத்தியோகத்தர், அத்தகைய காயங்கள் ஏற்பட்டகாலை, பெற்றுக் கொண்டிருந்த வேதனத்தோடு படியுமியன்ற கொடுப்பனவு, ஏலாமை ஏற்பட்ட திகதிக்குப் பின்னர் அவருக்குச் சேரத்தகு படியோடு கூடிய வேதன ஏற்றங்களும் உட்பட அவர் 55 வயதையடையும் வரை வழங் கப்படும்.

(11) கீழே காட்டியவாறு உழைப்பாற்றலில் ஏற்பட்ட இழப்புவீத அடிப்படை யில் 100,000ரூபாவில் ஒரு வீதமாயமையும், இழப்பீடாக கருணைக் கொடைக் கொடுப்பனவு.

| | | |
|---|---|---|
| உழைப்பாற்றல் இழப்பு | 20%ஆல் | ரூபா. 20,000 |
| " | 40% | ரூபா. 40,000 |
| " | 60% | ரூபா. 60,000 |
| " | 80% | ரூபா. 80,000 |
| " | 100% | ரூபா. 100,000 |

குறிப்பு: (1) மேற்குறித்தவற்றுக்குத் தகைமை பெறுவதற்கு காயத்தை வகுப்பீடு செய்வது, சுகாதாரச் சேவையில் பிராந்திய பணிப்பாளரால் நியமிக்கப்படும் மருத்துவச் சபையினால் செய்யப்படும்.

(2) (அ) திணைக்களத் தலைவர் மருத்துவச் சபை ஒன்றை நியமிக்குமாறு கோரி அப்பிரதேசத்துக்குரிய பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு உடனே விண்ணப்பித்தல் வேண்டும்.

(ஆ) மருத்துவசபை காயத்தை வகுப்பீடு செய்து அதன் அறிக்கையை திணைக்களத் தலைவருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**கடமை செய்யும் போது அசாதாரண சூழ்நிலைகளில் பயங்கரவாதச் செயலால் கொல்லப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர், உள்ளூராட்சிப் பணியாளர், அரசாங் கக் கூட்டுத்தாபனப் பணியாளர் ஆகியோரில் தங்கியிருப்போருக்கு இழப்பீடு வழங்கல்.**

(1) மரணமுற்ற உத்தியோகத்தருக்கு அவர் மரணமுற்ற தேதியிற் கொடுக் கப்பட்ட முழுச் சம்பளமும் படிகளும் அவர் உயிருடன் சேவையில் இருந்திருந்தால் காலாந்தரங்களில் அவருக்குக் கிடைத்திருக்கக் கூடிய எவையேனும் சம்பள, படி அதிகரிப்புகளுடன் அவர் 55 வயதினை எட்டக் கூடிய அத்தகைய காலம் வரையிலும் அவர் உயிருடன் சேவையில் இருந் திருந்ததாகக் கருதியபடி கொடுக்கப்படும்.

(11) ஆகக் கூடியது 150,000/-ரூபா வரையில் கருணைக் கொடை கொடுக்கப்படும். அது பின்வருமாறு பகிர்வு பெறும்.

(1) மனைவி — 75,000/- ரூபா.

பிள்ளைகள் — 18 வயதுக்குக் கீழ்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும் 18,750/- ரூபா என்ற ஒரே வீதத்தில்.

(2) மனைவி இறந்திருந்தால் — 18 வயதுக்குக் கீழ்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும் 37,500/- ரூபா கொடுக்கப்படும்.

குறிப்பு: (அ) (i)இன் கீழும் (ii)இன் கீழும் நன்மையடைவோரின் மொத்த எண்ணிக்கை 4ஆக இருக்கும், தகுதியுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 4ஐ விஞ்சுமிடத்து அத்தொகை எல்லாப் பிள்ளைகளிடையேயும் சமமாகப் பகிரப்படும்.

(ஆ) விவாகமாகாத ஒருவர் விடயத்தில் 75,000/- ரூபாவைக் கொண்ட ஒரு தொகை மரணித்த உத்தியோகத்தரின் பெற்றோருக்குக் கொடுக்கப்படும். பெற்றோரில் ஒருவர் இறந்திருந்தால் உயிர் வாழும் பெற்றோருக்கு முழுத் தொகையும் கொடுக்கப்படும். பெற்றோர் இருவரும் மரணித்திருந்தால் அத்தொகை தங்கியிருப்போருக்குக் கொடுக்கப்படும்

(இ) தங்கியிருப்போர் என்ற சொல், வாசம் வருமானம் எதுவாயிருப்பினும் பெற்றோர் என்று பொருள்படுவதோடு உத்தியோகத்தர் 55 வயதை எய்தும் காலத்துக்கு முன்னர் பெற்றோர் இறந்திருந்தால் 18 வயதுக்குக் குறைந்த சகோதரர்கள் எனவும் தொழில் செய்யா திருமணமாகாச் சகோதரிகள் எனவும் பொருள்படும்.

03. மேற்குறித்த கொடுப்பனவு தற்போதுள்ள எவையேனும் உரிமைக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாகக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

04. .......21/88....... இலக்கமிட்ட இந்தச் சுற்றுநிருபம், கீழ் வரு அரசாங்க நிருவாகச் சுற்று நிருபங்களில் அரசாங்க நிருவாகச் சுற்று நிருப இல. 296 தொடர்புபடுத்தப்பட்ட விடங்களில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

86.11.18 தேதியிட்ட 351ஆம் இலக்கச் சுற்றுநிருபம்

87.05.11 தேதியிட்ட 369ஆம் இலக்கச் சுற்றுநிருபம்

88.04.25 தேதியிட்ட 14/88ஆம் இலக்கச் சுற்றுநிருபம்.

ஒப்பம்: டி.பி.ஐ.பி.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.